அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி


# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை

விகாரி ❂ பங்குனி (மார்ச் – 2020) விலை: ரூ.10/–


முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்


1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் அசுவினித்தேவர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 14.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை குருபக்தியே கோடி நன்மை தரும்** ........ 16
5. மகான் காரைக்கால் அம்மையார் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல் ........ 34
6. மகான் சுப்பிரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல் ........ 37
7. மாசி மாத பௌர்ணமி விழா ........ 42
8. பங்குனி மாத பௌர்ணமி விழா ........ 42
9. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 43
10. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 53


சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து
உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

உதவியே உயர்நாளாம் முழுமதியில்
உலகோர் பிரணவக் குடிலுக்கு
ஆதரவாய் அணுகி தொடர்ந்து
அரங்க ஞானியிடம் தீட்சை பெற்று வர
வருகவே சகல இன்னலும்
வறுமையும் ருணமும் விலகி
மாறுதலும் மனத்தேறுதலும் காணும்
மக்களை நோக்கி அழைப்புதந்து
தந்துமே உங்களை மீட்பதும்
தவவாழ்வு தந்து ஞானிகளாக
சிந்தைமாற்றி கலியுகம் தன்னில்
சிறப்பான ஞானயுகம் படைப்பதும்

– மகான் அசுவினித் தேவர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

ஓம் பத்ரகிரியார் திருவடிகள் போற்றி
ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் பரத்துவாசர் திருவடிகள் போற்றி
ஓம் பரமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் பராசரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பாம்பாட்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பிங்களமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் பிடிநாகீசர் திருவடிகள் போற்றி
ஓம் பிருகுமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பிரும்மமுனிவர் திருவடிகள் போற்றி 100
ஓம் பீர்முகமது திருவடிகள் போற்றி
ஓம் புண்ணாக்கீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலிப்பாணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பூனைக்கண்ணார் திருவடிகள் போற்றி
ஓம் போகமகாரிஷி திருவடிகள் போற்றி
ஓம் மச்சமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் மஸ்தான் திருவடிகள் போற்றி
ஓம் மயூரேசர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி 110
ஓம் மார்க்கண்டேயர் திருவடிகள் போற்றி
ஓம் மாலாங்கன் திருவடிகள் போற்றி
ஓம் மிருகண்டரிஷி திருவடிகள் போற்றி
ஓம் முத்தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் மெய்கண்டதேவர் திருவடிகள் போற்றி
ஓம் மௌனச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யாகோபு திருவடிகள் போற்றி
ஓம் யூகிமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் யோகச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யோகானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி 121
ஓம் வசிஷ்டமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரதரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வராகிமிகி திருவடிகள் போற்றி
ஓம் வால்மீகி திருவடிகள் போற்றி

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.




அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# விகாரி வருடம் பங்குனி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் அசுவினித்தேவர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. வருகிறார் வருகிறார் ஞானச்சுடராக
வடிவேலன் உலக மக்களை காக்க
தருகின்றார் அருளமுது தன்னை
தவசி அரங்கன் கரம் வழியாக

2. ஆகவே அரங்க மகானின்
அருள்ஞானக் குடிலை அணுகி
யுகமக்கள் அருளமுது உண்டுவர
உயர்ஞானம் பெறுவரெனக் கூறி

3. கூறியே அரங்கன் சக்தியாக
கொள்கை தாங்கி வருகின்ற
ஆறுமுகனாரின் ஞானத்திருவடி நூலுக்கு
அசுவினித்தேவர் யானும் இனிதே

4. இனிதே விகாரி சேல்திங்களுக்கான
இயம்பிடுவேன் ஆசி நூல்தன்னை
கனிவேலவன் கலியுக மாற்றம் தர
கருணைபட அரங்க ஞானியருள்ளே

5. உள்ளாக அறமும் தருமமும்
உபதேசமும் உயர் ஞானமுமாக
வல்லமை கூட்டி நிறைந்திருக்க
வையகத்தில் அரங்கமகான் தந்த

6. தந்தநல் ஞான உபதேசங்களை
தரணியோர் கற்றுத் தேறவும்
சிந்தைவைத்து ஞானம் பெறவும்
சிறப்பறிவு கூடி முழுமை அடைய வேண்டி

7. வேண்டியே ஞானத்திருவடி நூலாக
வேலவனார் ஆசிபட வருக
தொண்டென உலகமக்களிடை
திருவடியாக கொண்டு செல்லும் சீடர்கட்கும்

8. சீடர்கட்கும் ஞான நூல்தனை
சிறப்புற ஏற்று வாசித்து
தடையற ஞானவழித் தொடரும்
தரணியோர் அனைவருக்கும் ஞானிகள்

9. ஞானிகள் ஆசி கிட்டுவதுடன்
ஞாலமதில் உலகியல் வாழ்வில்
ஞானிகளின் பாதுகாப்புடனும்
நல்ல வாழ்வும் வளமும் கிட்டும்

10. கிட்டுமே கிரக இடர்கள் வழி
கருமவினை வழி துன்பம் அனுபவிப்பவரும்
தட்டாது ஞான வழிவந்து
தவராசன் தருமத்தில் உதவி

11. உதவியே உயர்நாளாம் முழுமதியில்
உலகோர் பிரணவக் குடிலுக்கு
ஆதரவாய் அணுகி தொடர்ந்து
அரங்க ஞானியிடம் தீட்சை பெற்று வர

12. வருகவே சகல இன்னலும்
வறுமையும் ருணமும் விலகி
மாறுதலும் மனத்தேறுதலும் காணும்
மக்களை நோக்கி அழைப்புதந்து

13. தந்துமே உங்களை மீட்பதும்
தவவாழ்வு தந்து ஞானிகளாக
சிந்தைமாற்றி கலியுகம் தன்னில்
சிறப்பான ஞானயுகம் படைப்பதும்

14. படைப்பதுமே அரங்கமகானின்
பாருலக காப்பின் சேவையாக இருக்க
தடையற ஞானயுக மாற்றத்துக்கு
தவராசனின் உயர் கொள்கையான

15. ஆனதொரு சுத்த சைவநெறி
அறமெனும் தருமநெறி ஏற்று
ஞானமாக மக்கள் வணங்கிவர
ஞாலமதில் உலகமாற்றமதும்

16. மாற்றமதும் சடுதி காணநேரும்
மக்களெல்லாம் ஏற்று வர
ஆற்றல் பெருக்கம் தருமவழி
அகிலமெல்லாம் பரவி இனிதே

17. இனிதே கலியின் கொடுமைகள்
எல்லாம் பூரணமாக விலகி
துணிவுபட மக்களிடை மனபலம்
தூயசிந்தை தெளிவு திடம்கூடி

18. கூடியே அரங்கமகான் வழி
குறைவின்றி மக்களை தேற்றுகின்ற
இடரில்லா ஞானிகள் தேர்வு
இனிதே அரங்கன் வழி நடந்துவர

19. வருகின்ற மக்கள் எல்லோரும்
வல்லமைபட ஞானவான்களாகி
தரும உலகமாக்கும் காலம் சடுதி
தாமுரைத்த ஞானத்திருவடி நூலுக்கு ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

விகாரி ஆண்டு பங்குனி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் அசுவினித்தேவர் அருளிய ஆசி நூலின் சாரம் :

உலகமக்களே ஞானச்சுடராக வருகின்றார் வருகின்றார் முருகப்பெருமானும், உலகமக்களை காத்திடவே தருகின்றார் மக்கள் கடைத்தேறிட அருளமுதினை, மகாதவசி ஆறுமுக அரங்கமகான் திருக்கரங்கள் மூலமாக. ஆதலினாலே மக்களே ஆறுமுக அரங்கமகானின் அருள் ஞான ஓங்காரக்குடிலினை அணுகி அரங்க தரிசனம் பெற்று ஆங்கே ஞானிகளின் அருளாசியுடன் சமைக்கப்படுகின்ற அருளமுதினை (உணவினை) உண்டு வரவர, உண்ணும் அவரெல்லாம் உயர்ஞானத்தினை பெறுவார்கள் எனக் கூறியே ஆறுமுக அரங்கமகானின் சக்தி வடிவமாக அரங்கர் தூயநெறிக் கொள்கைகளை தாங்கி வெளிவருகின்ற முருகப்பெருமானின் ஞானத்திருவடி நூலிற்கு அசுவினித்தேவர் யானும் விகாரி வருடம் பங்குனி மாதத்திற்கான ஆசி நூல்தனையே உரைக்கின்றேன் என்கிறார் மகான் அசுவினித்தேவர்.

கருணையே வடிவான ஆறுமுக அரங்கமகா தேசிகரிடத்து அறமும் தருமமும், ஞான உபதேசமும் உயர்ஞானமும் வல்லமையுடன் நிறைந்து இருக்கின்றதப்பா. ஆதலினாலே ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கருணையோடு மக்கள் நலன் கருதி கூறுகின்ற ஞான உபதேசங்களை உலகமக்கள் எல்லாம் உள்ளன்போடு ஏற்று கற்று தேறிடவும் அரங்கரின் உபதேசங்களை உலகோர் கடைப்பிடித்து ஞானம் பெறவும் சிறப்பறிவு பெருகி முழுமை அடையவும் வேண்டியே அரங்கரின் அனைத்து உபதேசங்களையும் செயல்பாடுகளையும் தாங்கி ஞானத்திருவடி நூலாக முருகப்பெருமான் அருளாசியுடன் வெளிவருகின்றதப்பா.

ஆகையினாலே தொண்டுகளாக அரங்கரின் சீடர்கள் ஞானத்திருவடி நூலினை முருகப்பெருமானின் திருவடியாக உலகமெங்கும் மக்களிடையே கொண்டு செல்ல உலகமக்களிடையே கொண்டு செல்லும் சீடர்களுக்கும், உத்தமமான ஞானத்திருவடி நூலினை வாங்கி படித்து அரங்கரின் உபதேசங்களை ஏற்று உபதேச வழிதனிலே நடக்கின்றவர்களுக்கும் ஞானிகளின் ஆசிகள் கிடைப்பதுடன் அவர்களது உலகியல் வாழ்க்கைக்கும் ஞானிகளின் பாதுகாப்பு கிடைப்பதுடன் நல்ல அமைதியான வாழ்வும் வளமான வாழ்வும் அவர்களுக்கு உண்டாகும்.

கிரக தோஷங்கள் பீடிக்கப்பட்டு கிரக தோஷ துன்பங்களினாலும், முன்ஜென்ம பாவங்களான கர்மவினைகளின் மூலமாக அனுபவிக்கும் துன்பங்களினாலும் வருந்துகின்றவர்கள் எல்லாம் ஞானபண்டிதன் அவதாரமாகிய ஆறுமுக அரங்க மகாதேசிகனார் கூறும் ஞானவழிகளை ஏற்று கடைப்பிடிப்பதுடன் ஆறுமுக அரங்கமகான் உலகநலனிற்காக செய்கின்ற தானதரும பணிகளுக்கு பொருளுதவிகளைச் செய்தும் வருவதுடன் உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகான் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தினிலே உலகமக்களை அழைத்து செய்கின்ற ஞான பூசைகளிலே தவறாமல் கலந்து கொண்டு ஆறுமுக அரங்க மகானின் திருக்கரங்களினாலே தீட்சை உபதேசம் பெற்று வரவர அவர்களது சகலவிதமான துன்பங்களும் அவர்களை விட்டு விலகிடும். அவர்களை அண்டிய வறுமையும், கடன் சுமைகளும் விலகி மாறுதல்கள் உண்டாகும், மனம் தெளிவடையும்.

உலகமக்களை தாயினும்மிக்க கருணையோடு அழைத்து அவர்களது குற்றங்களை போக்கி பாவவினைகளில் இருந்தும் மக்களை மீட்டு அவர்களுக்கு தவவாழ்வினை அளித்து ஞானவழியில் செலுத்தி ஞானமடையச் செய்தும் துன்பம்மிக்க கலியுகத்தினை மாற்றி சிறப்புமிக்க ஞானயுகம் படைப்பதுமே ஆறுமுக அரங்கமகானின் அவதார நோக்கமாக இவ்வுலகிற்கு செய்கின்ற மாபெரும் சேவையாக இருக்கின்றபடியினாலே தடையில்லாத உலகப்பெருமாற்றத்திற்கு அரங்கரின் உயர் ஞானக் கொள்கையான சுத்த சைவ நெறியினை அறம் என்கிற தர்ம நெறியினை உலகமக்கள் எல்லாம் ஏற்று ஞானமாக முருகப்பெருமானை தினம் தினம் தவறாமல் பூஜைகள் செய்து வணங்கி வரவர உலகினில் உலகப் பெருமாற்றம் விரைந்து உண்டாகிடும். உலக மக்களெல்லாம் அரங்க நெறியினை ஏற்று வரவர உலகமெல்லாம் தருமம் பரவி கலியின் கொடுமைகள் பூரணமாக விலகி மக்களிடையே துணிவு உண்டாகி மனோபலம் பெருகி தூய்மையான சிந்தனைகள் பெருகி மனோதெளிவும் அறிவு தெளிவும் உண்டாகி மனோதிடமும் அறிவு திடமும் பெருகிடும்.

உலகமெங்கும் உலகப்பெருமாற்றத்திற்கு உண்டான உலகமாற்ற ஞானிகளை உருவாக்குகின்ற ஞானத்தேர்வுகளும் அதற்கான கடைத்தேற்றுகின்ற செயல்கள் எல்லாம் வெகுவிரைவாக யுகமாற்ற ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலம் நடந்து வருகின்ற காரணத்தினாலே உலக மக்களே இந்தவித வாய்ப்பினை தவறவிடாமல் பயன்படுத்தி அரங்கன் திருவடி சரணடைந்துவிட அரங்க மகான் திருவடி சரணடைந்த மக்கள் எல்லாம் வல்லமையுடன் ஞானவான்களாக ஆகி அரங்கர் தலைமையிலே இவ்வுலகை தர்ம உலகமாக்கும் காலம் விரைந்து உண்டாகி யுகமாற்றம் இனிதே நடந்தேறும் எனக் கூறுகிறார் மகான் அசுவினித்தேவர்.

–சுபம்–

**அருளாளர் அருணகிரி அருளிய அலங்காரம்**
**இருளெல்லாம் விலகி இன்பம் உண்டாமே!**

**அருளாளர் அருணகிரி அருளிய அலங்காரம்**
**பொருள் அறிந்து கற்பவர் புண்ணியரே!**

**– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.**

# முருகன் திருவடி வாழ்க

## துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)
2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).
3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).
4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).
5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
14.02.1988 அன்று அருளிய

# குருபக்தியே கோடி நன்மை தரும்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சுட்டிக் காட்டுகின்ற பாதை ஜென்மத்தைக் கடைத்தேற்றும் பாதையாகும்.

பிறவித்துன்பத்தை நீக்கக் கூடிய கருத்துகளை சொல்லுகின்ற சங்கம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் உயிரைப் பற்றியும், உடலைப் பற்றியும் பேசுகின்ற சங்கம் ஆகும்.

மற்ற ஆன்மீக சங்கத்தில் சொல்ல முடியாத ஒன்றை, அவர்கள் அறிய முடியாத ஒன்றை நாங்கள் உங்களுக்கு சொல்கிறோம்.

நாங்கள் தினமும் உள்ளம் உருகி மகான் நந்தீசர், மகான் திருமூலதேவர், மகான் அகத்தீசர் போன்ற அரும்பெரும் ஞானிகளை பூஜை செய்கிறோம். அதனால்தான் மற்ற ஆன்மீகவாதிகள் சொல்ல முடியாத ஒன்றை எங்களால் சொல்லமுடிகிறது.

ஞானிகளை பூஜை செய்வதால்தான், மற்றவர்கள் அறிய முடியாத ஒன்றை அறிய முடிந்தது. அறிய முடிந்தது மட்டுமல்லாமல் அதை எப்படியெல்லாம் சொன்னால் உங்களுக்கு புலப்படும் என்பதை ஆசான் எங்களுக்கு உணர்த்துகிறார்.

இன்றைய தினம் ஆசான் அகத்தீசர் முப்பத்தாறு விநாடிகள் எனது நாவிலிருந்து பேசுவதாக கட்டளை. அதற்கு பிறகு ஆசான் பிரம்மமுனியும், ஆசான் வசிஷ்டமுனியும், ஆசான் நந்தீசரும் எனது நாவிலிருந்து பேசுவதாக கட்டளை.

நாங்கள் பேசுகின்ற கருத்துகளை, நீங்கள் கவனித்து கேட்டீர்கள் என்றாலே போதும். என்னுடைய வார்த்தை உங்கள் காதில் விழுந்தாலே போதும். நாங்கள் பேசுகின்ற ஒவ்வொரு கருத்தும் எந்தை ஆசான் அகத்தீசர் பேசுவதாக அர்த்தம்.

நான் உங்கள் மீது கருணை கொண்டு மிக நுண்ணிய, நுணுக்கமான பல கருத்துகளை எளிமையாக சொல்கிறேன். எந்தளவிற்கு உங்களுக்கு பக்தி நாட்டம் இருக்கிறது, எந்தளவிற்கு உங்களுக்கு ஆன்மீக அறிவு இருக்கிறது, எந்தளவிற்கு உண்மைப் பொருளைப் பற்றிய அறிவு உங்களுக்கு இருக்கிறது என்பதை அறிந்து உங்களுக்கு புரியும்படி எந்தை ஆசான் அகத்தீசர் எனது நாவில் தங்கி பேசுகிறார். ஆகவே நாங்கள் இப்பொழுது பேசுகின்ற கருத்துகள் ஆசான் அகத்தீசர் பேசுவதாக எண்ண வேண்டும். இதை நாங்கள் சொல்வதற்கு காரணம், எங்களுக்கு வந்த சுவடியில் ஆசான் என்னுள் தங்கி பேசுவதாக சொல்லியிருக்கிறார்.

இங்கே ஒவ்வொருவரும் வந்திருப்பதன் நோக்கம், ஆசானின் ஆசியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான். நோயில்லா வாழ்வு, வறுமையில்லா வாழ்வு, தெளிவான அறிவு, சந்ததிகள் நல்லபடி வாழ வேண்டும், நல்ல சுபிட்சமான வாழ்வு என்பதையெல்லாம் மையமாக கொண்டு ஆசானின் ஆசியைப் பெற வேண்டும். இதற்குத்தானே வந்திருக்கிறோம்.

எங்களது கையால் விபூதி கொடுக்க வேண்டுமென்பது கட்டளை. நாங்கள் ஆசான் அகத்தீசரை நினைத்து விபூதி தருகிறோம். அந்த விபூதிக்கு அளவிலாத பெருமை உண்டு. யாரெல்லாம் எதை வேண்டி வந்தார்களோ, அதுவெல்லாம் நிறைவேறும். இது ஆசான் அகத்தீசர் கட்டளை.

எங்களது கையால் விபூதி கொடுக்கும்போது அதற்கு அவ்வளவு மகிமை எப்படி வந்தது? நாங்கள் ஆசான் அகத்தீசரை பூஜித்த காரணத்தால் அந்த மகிமை வந்தது.

உங்களுக்கு பூஜை முறையை இலகுவாக சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். நாங்கள் பேசுகின்ற கருத்துகள் அனைத்தும் உண்மை ஆன்மீகத்தை அறிந்து கொள்வதற்கு பயன்படும். ஒரு உயிர் அசைந்தால் அதற்கு அடிப்படை காரணம் என்ன என்பதைப் பற்றி பேசுகின்ற சங்கம் இது.

மகான் சிவவாக்கியர் நமக்கு தெரிந்த ஆமையை உவமையாக வைத்து தனது பாடலில் சொல்கிறார். ஆமை வாழ்கின்ற இடம் தண்ணீர், அது முட்டையிடுகின்ற இடம் கரை.

ஆமை கரையிலே முட்டையை இட்டுவிட்டு, மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் கடலிற்குள் சென்றுவிடும். அவ்வளவு தொலைவிலிருந்து தான் இட்ட முட்டையை ஆமை நினைத்தவுடன், அவை ரூபமாக வெளியே வரும். ஆமைக்கு அந்த சக்தி உண்டு. அந்த சக்தி இயற்கை தந்தது.

ஆமை நினைத்தால் முட்டையிலிருந்து ஆமைக்குஞ்சு ரூபமாக வெளியே வருவதுபோல், ஆசான் அகத்தீசரை நினைத்தால், உங்களுடைய பிறவித்துன்பத்தைப் பற்றி உணர்கின்ற உணர்வு தோன்றும். இதுவெல்லாம் நமக்கு எடுத்துக்காட்டு.

ஆசான் அகத்தீசரை நினைத்து பூஜித்தால், அவர் பெற்ற பக்தி உணர்வு, அவர் பெற்ற தவ வலிமை, அவர் பெற்ற தருமபலம் இப்படி எல்லா அருளாற்றலும் உங்களுக்கு உடனே உணர்த்தப்படும், அந்த சக்தி பெறப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

**கடலிலே திரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்**
**கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்**
**மடலுளே யிருக்குமெங்கள் மணியரங்க சோதியை**
**உடலுளே நினைந்துநல்ல வுண்மையான துண்மையே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 99.**

எந்த இதயம் ஆசான் அகத்தீசரை நினைக்கின்றதோ, அப்பொழுதே அந்த இதயத்தில் ஆன்மீக உணர்வு தோன்றுகிறது. நமது அன்பர்கள் காலை எழும்போதே, அகத்தீசா என்று பன்னிரண்டு முறை சொல்லிதான் எழுவார்கள்.

ஆமை நினைத்தால் அந்த முட்டை எப்படி ரூபமாக ஆகிறதோ, அதைப்போல பொதிகை மலையில் ஆசான் அகத்தீசர் இருந்தாலும், அந்த உணர்வுகள் ஊட்டப்படும்.

ஏன் ஆமையை உதாரணமாக சொல்கிறார் என்றால், ஆமை நினைவாலே தனது முட்டையை அடைகாப்பதுபோல், நாமும் ஆசான் அகத்தீசரை தினமும் பூஜித்தால் நமக்கு ஆசானின் அனுக்கிரகம் உண்டாகும் என்கிறார்.

**தண்ணீரிலிருக்கும் மீன்கள் தண்ணீரிற் கருவைப்பித்திக்**
**கண்ணினாற் பார்க்கும்போது கயலுரு வானாற் போல**
**நன்னிய குருவைக் கண்டு நாதனல் லுருவைச் சேர்த்து**
**விண்ணின்மேல் நாகைநாதர் மெல்லடி வெளியார் நெஞ்சே.**

**– மகான் கணபதிதாசர் – நெஞ்சறிவிளக்கம் – கவி எண் 16.**

ஆமை கரையிலே முட்டையிடும், மீன் தண்ணீரில் முட்டையிடும். தான் இட்ட முட்டையை அந்த மீன் உற்று நோக்கினால் அந்த முட்டை மீன் குஞ்சாகும்.

ஆசான் அகத்தீசரை நினைத்து சிந்தித்தாலே அருளாற்றல் கிடைக்கும். ஞானியர்கள் அனைவரும் மோனநிலையில் இருப்பார்கள். இந்த உலகத்தை அவர்கள் கவனிக்க மாட்டார்கள். ஆனால் எப்பொழுது கவனிப்பார்கள் என்றால், யாரோ ஒருவன் தனது பிரச்சனையைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி, நோயைப் பற்றி இப்படி ஏதோ ஒரு துன்பம் வரும்போது அகத்தீசா என்று நினைக்கும்போது, ஆசான் தனது சிந்தனையை அவன் மேல் திருப்புவார்கள். அப்படி அவர்கள் தனது சிந்தனையை திருப்பும்போது அந்த சிந்தனையானது பல நன்மைகளை தரும்.

எந்த பிரச்சனையைப் பற்றி ஆசான் அகத்தீசரை நினைத்தாலும், ஆசான் அப்படியே நம்மை பார்ப்பார். எப்படி மீன் தனது பார்வையால் தனது முட்டையை பார்த்து ரூபமாக்குகிறதோ, அதேபோல் ஆசான் அகத்தீசர் நாம் என்ன நினைக்கிறோமோ அதுவெல்லாம் சித்திக்கும் என்று சொல்வார். இதெல்லாம் உவமைகள். உவமை காட்டுவதன் நோக்கம், இப்படியெல்லாம் ஆசான் மீது பக்தி செலுத்தலாம் என்பதற்காகத்தான்.

இவர்கள் ஏன் நம்மை நினைக்கிறார்கள்? என்ன காரணம்? வறுமையா, குழந்தையின்மையா என்று நம்மை பார்ப்பார். சிலருக்கு பெண் குழந்தை இருக்கும், ஆண் குழந்தை இல்லாமல் இருக்கலாம் அல்லது தனக்கு பிறந்த குழந்தை அங்கஹீனமாக இருக்கலாம். இப்படி பல்வேறு பிரச்சனைகள் வாழ்க்கையில் இருக்கும். இவர்களெல்லாம் ஆசானை பூஜை செய்து வணங்கி தனது பிரச்சனையிலிருந்து விடுபட வேண்டும்.

ஆமை தனது சிந்தனையால், முட்டையை குஞ்சு பொரிக்கும், மீன் தனது முட்டையை உற்றுநோக்கினால், அந்த முட்டை குஞ்சு பொரிக்கும்.

**பச்சைமண் பதுப்பிலே பழுப்பதிந்த வேட்டுவன்**
**நித்தமும் நினைத்திட நினைந்தவண்ண மாயிடும்**
**பச்சைமண் இடிந்துபோய் பரந்ததும்பி ஆயிடும்**
**பித்தர்காள் அறிந்து கொள்க பிரானிருந்த கோலமே.**

**– மகான் சிவவாக்கியர் பாடல் – 107.**

**காட்டினில் மேவுகின்ற கனபுழு வெல்லாம் பார்த்து**
**வேட்டுவ னெடுத்து வந்து விரும்பியக் கிருமி தன்னைக்**
**கூட்டிலே அடைத்தும் அந்தக் குளவிதன் உருவாய்ச் செய்யும்**
**நாட்டினில் நீதா னாகை நாதரை வணங்கு நெஞ்சே.**

**– மகான் கணபதிதாசர் – நெஞ்சறிவிளக்கம் – கவி எண் 11.**

குளவி புரட்டாசி, ஐப்பசி காலங்களிலே ஈர மண்ணை கொண்டு வந்து கூடு கட்டும். அந்தக் கூட்டில் தனக்கு விருப்பமான புழுவை கொண்டு வந்து

அடைக்கும். அந்த புழு குளவியாக வேண்டும், குளவியாக வேண்டும், குளவியாக வேண்டும் என்று ஒரே சிந்தனையாக இருக்கும். இதை கவனிக்க வேண்டும். இதேபோன்று ஒரே சிந்தனையாக ஆசான் அகத்தீசரை மனதில் எண்ணி பூஜை செய்தால் சித்தி பெறலாம்.

ஞானியர்கள் அனைவரும் நம்மைப் போன்றே மனிதர்களாக இருந்துதான் ஞானியாக ஆனார்கள். அவர்கள் ஒரே சிந்தனையாக இருந்ததால், நூறு கோடி ஆண்டுகளை, ஒரு நொடிப்பொழுதாக வாழக் கூடிய ஆற்றலை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். எதை நோக்கி இருந்தாலும், சிந்தனை ஒன்றாக இருக்க வேண்டும். ஒரே சிந்தனையாக இருந்தால் எண்ணியது சித்தி பெறும்.

குளவி புழுவை எடுத்து வந்து கூட்டில் அடைத்து, குளவியாக வேண்டும், குளவியாக வேண்டும், குளவியாக வேண்டும் என்று நினைக்குமாம். தொடர்ந்து அப்படி நினைப்பதால் அந்த புழு குளவியாகும்.

ஆமை நினைத்தால், மீன் பார்த்தால் முட்டை பொரித்து ரூபமாகும். ஆனால் குளவி விடாமுயற்சியால் அந்த புழுவை தன் இனமாக்கும், இதையெல்லாம் உவமைக்கு ஆசான் சொல்வார்.

ஞானிகள் பார்வை நம்மீது பட வேண்டும். ஞானிகள் மீது நாம் தொடர்ந்து அன்பு செலுத்தினால் அவர்களது பார்வை நம்மீது படும். ஆசானை சிந்தித்தால், அவர் பார்வை நம்மீது பட்டால் நமக்கு நல்லுணர்வு மிகுதியாகும்.

ஆசானை நினைத்து தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டால், ஒன்று மற்றொன்றாகும். அவர்கள் எதையும் செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் பாதத்தைப் பற்றினால் எதையும் செய்வார்கள். இதற்காகத்தான் இந்த உவமைகளை தனது பாடலில் சொல்லியிருக்கிறார்.

நாம் பார்க்கக் கூடிய ஆமை, மீன், குளவி, மண்பாண்டம் செய்தல் போன்றவற்றை உவமையாக ஆசான் சொல்கிறார்.

குசவன் மண்பாண்டம் செய்வதற்கு தகுந்த மண்ணை எடுத்து வந்து, அதிலுள்ள சிறுசிறு கற்களை எடுத்துவிட்டு, சுத்தம் செய்து தண்ணீர் ஊற்றி நன்றாக மிதிப்பான். பிறகு அந்த மண்ணை திரிகையில் ஏற்றுவான்.

அப்பொழுது அவனுடைய மனைவி திரிகையை சுற்றிக் கொண்டே, பக்கத்து வீட்டில் உலைமூடி கேட்டிருந்தார்கள், அடுத்த வீட்டுக்காரம்மாள் குழம்பு சட்டி வேண்டுமென்று கேட்டிருந்தார்கள், சாதம் வடிக்கும் பானை வேண்டுமென்று எதிர்வீட்டுக்காரம்மாள் கேட்டிருந்தார்கள் என்று சொல்வாள். அவன் திரிகையில் ஏற்றிய மண்ணை, மனைவி சொல்லசொல்ல எது எது தேவைப்படுகிறதோ அவற்றையெல்லாம் செய்வான். இதை ஆசான் சுட்டிக்காட்டுகிறார்.

**குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்**
**குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்**
**குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்**
**அசைவில் உலகம் அதுஇது வாமே.**

**– திருமந்திரம் – அநுக்கிரகம் – கவி எண் 443.**

திரிகையில் ஏற்றிய மண்ணை குசவன் தனக்கு தேவையான மண்பாண்டமாக செய்வது போல், எனது ஆசான் நந்தீசர், நான் என்னென்ன நினைக்கிறேனோ அதையெல்லாம் செய்து முடிப்பார் என்று மகான் திருமூலர் சொல்கிறார்.

சில குழந்தைகள் மந்தபுத்தியோடு இருக்கும். ஆனால் தாயும் தந்தையும் சிறப்பறிவு உள்ள மக்களாக இருப்பார்கள். குழந்தையிடம் எதை சொன்னாலும் அதற்கு புலப்படாது. இதற்கு ஆசான் அகத்தீசர், ஆசான் நந்தீசர் பாதத்தை பூஜை செய்தால் அந்தக் குழந்தைக்கு மந்த புத்தி மாறி அறிவு வரும் என்று சொல்வார்.

குழந்தை மந்தபுத்தியோடு இருப்பதற்கு அந்த பெண்களே காரணம். அந்தக் குற்றம் பெண்களுடையது.

**அசைவில் உலகம்** – ஒரு குழந்தைக்கு மந்த புத்தி ஏற்படுவதற்கு காரணம் தாயின் மீது உள்ள குற்றமே. ஒரு குழந்தை ஊமையாக இருப்பதற்கு காரணம் தாயின் மீது உள்ள குற்றமே. ஒரு குழந்தை பார்வையின்றி பிறப்பதற்கு காரணம் தாயின் மீது உள்ள குற்றமே. ஆசான் திருமூலதேவர் உங்கள் மீது மூன்று குற்றச்சாட்டுகளை வைக்கிறார், அதற்கு நீங்களே பொறுப்பாளி என்று சொல்கிறார்.

ஒரு பெண் பெற்றெடுத்த குழந்தை சுறுசுறுப்பாகவும், துடிதுடிப்பாகவும், சிறப்பான அறிவுள்ள குழந்தையாக இருந்தால், அந்த குழந்தையின் தாய் ஆரோக்கியமானவள் என்று சொல்லலாம். ஒரு பெண் ஆரோக்கியமானவளா என்பதை அவர்களை பார்த்தவுடன் எங்களால் அறிந்து கொள்ள முடியும்.

பெண்ணுக்கு மலச்சிக்கல் இருக்கக் கூடாது. சிலபேர் பசித்த நேரத்தில் சாப்பிட மாட்டார்கள். அப்படி பசியெடுக்கும் நேரத்திலே காபி குடித்துவிட்டு சாப்பிடாமல் வேலை பார்ப்பார்கள். அதனால் மலச்சிக்கல் வரும். அதை அவர்களால் கவனிக்க முடியாது.

இதற்கு பசி எடுத்தவுடன் சாப்பிட வேண்டும், நார்ச்சத்துள்ள உணவுகளை சாப்பிட வேண்டும், தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும், கனிகளை நிறைய சேர்க்க வேண்டும். இப்படி சாப்பிட்டால், மலச்சிக்கல் வராது. சில பெண்கள்

இதை கவனிக்காமல் அப்படியே விட்டுவிடுவார்கள். அதனால் தொடர்ந்து மலச்சிக்கல் ஏற்பட்டு, இரத்தம் கெட்டுவிடும். அப்போது கருத்தரித்தால் அந்த குழந்தைக்கு மந்தபுத்தி உண்டாகும்.

பெண்களாகிய நீங்கள் உங்களை பண்படுத்திக் கொள்ள வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், மாதப்பொழுது முறையாக ஆகிறதா என்பதை பெண்கள் கட்டாயம் கவனிக்க வேண்டும். தினமும் மலஜலம் சுத்தமாக வெளியேறுகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். இல்லையென்றால் குழந்தைக்கு மந்தபுத்தி வரும். இதை நாங்கள் சொல்லவில்லை, ஆசான் திருமூலதேவர் சொல்கிறார்.

ஆகவே நீங்கள் தினமும் உடம்பை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் நல்ல பிள்ளைகளை, சுறுசுறுப்புள்ள பிள்ளைகளை, சிறப்பறிவு உள்ள பிள்ளைகளை பெற்றெடுக்க முடியும்.

சில பெண்கள் நிறைய தண்ணீர் குடிக்க மாட்டார்கள், தண்ணீர் குடிப்பதற்கே சோம்பேறித்தனப்படுவார்கள். அவர்களுக்கு சரியானபடி நீர் பிரியாது. அந்த சமயத்தில் கருத்தரித்தால், அந்த குழந்தை ஊமையாக பிறக்கும்.

மலச்சிக்கல் காரணமாகவும், சரியானபடி நீர் பிரியாமலும் இருந்தால் ஒன்று மந்தபுத்தி, இன்னொன்று ஊமைப்பிள்ளையாக பிறக்கும். இதற்கு நீயே குற்றவாளி என்கிறார் ஆசான் திருமூலதேவர்.

சரியானபடி மலஜலம் பிரியாமல் உடம்பிலே கழிவுப்பொருள் தங்கி உடம்பெல்லாம் சார்ந்துவிட்டால், அந்த சமயத்தில் கருத்தரித்தால் அந்த குழந்தை பார்வையின்றி பிறக்கும்.

**மாதா உதரம் மலமிகில் மந்தனாம்**
**மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்**
**மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை**
**மாதா உதரத்தில் வைத்த குழவிக்கே.**

**– திருமந்திரம் – கர்ப்பக்கிரியை – கவி எண் 481.**

இங்கே ஊழ்வினை மீதோ, தெய்வத்தின் மீதோ, உங்கள் தலையெழுத்து என்றோ குறை சொல்லி நீங்கள் தப்பித்து கொள்ள முடியாது. நீங்கள் குற்றவாளிகளே. ஆசானை பூஜித்தால் இப்படி உள்ளவர்களுக்கும் அனுக்கிரகம் செய்வார்.

பெண்களாகிய உங்கள் பலகீனத்தால், அஜாக்கிரதையால், கவனக்குறைவால் ஏற்பட்ட குறைபாடுகளுக்கு ஆசான் அகத்தீசரை வணங்குவதே பரிகாரம். இப்படிப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய ஆசான் அகத்தீசரால்தான் முடியும்.

**அசைவில் உலகம்** – அப்படி உங்கள் உடம்பில் உள்ள குற்றத்தால் பிறந்த குழந்தையாக இருந்தாலும் சரி, ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றுங்கள். உங்கள் குழந்தை நல்லபடி இருக்க வாய்ப்புண்டு.

ஆசான் இராமலிங்கசுவாமிகளை பெற்ற தாய், மிக்க சிறப்பு வாய்ந்தவர், பெருமைக்குரியவர்.

ஆசான் இராமலிங்கசுவாமிகளை பெற்ற தாய், தனக்கு பிறக்கக் கூடிய குழந்தை உலகம் போற்றக்கூடிய மனிதனாக வேண்டுமென்று ஆசானை கேட்டார். தான் பெற்றெடுக்கும் குழந்தை உலகம் போற்றுகின்ற அளவிற்கு சிறப்பறிவை பெற்று புகழுண்டாக வேண்டுமென்று அவருடைய தாய் ஆசானை கேட்டாள்.

நான் நல்ல குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டுமென்று பெண்கள் ஆசானிடம் கேட்க வேண்டும். நான் பெற்றெடுக்கும் பிள்ளை நாடாள வேண்டும், எனது பிள்ளை ஞானியாக வேண்டும், எனது பிள்ளை கடவுளாக வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும். எந்த தாயாவது இப்படி கேட்டிருப்பார்களா?

சிறப்பறிவுள்ள குழந்தைகளை எனக்கு கொடு என்று ஆசான் அகத்தீசரை கேட்க வேண்டும். இப்படி தினமும் கேட்க வேண்டும். நல்ல பிள்ளையை உருவாக்கவோ, ஞானியை உருவாக்கவோ, கடவுளை உருவாக்கவோ பெண்களாகிய உங்களால்தான் முடியும். இதற்கு நீங்கள் தினமும் ஆசானை பூஜை செய்ய வேண்டும்.

திருமணம் ஆகாத பெண்கள் பண்புள்ள கணவன் அமைய வேண்டுமென்று ஆசானை பூஜை செய்து கேட்க வேண்டும். திருமணம் ஆன பெண்கள் பண்புள்ள குழந்தைகள் வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும். ஆசான் எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்.

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்.**

**– திருக்குறள் – தவம் – குறள் எண் 265.**

மனித வர்க்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவு என்பது பொதுவானது. பெண்களாகிய உங்களால்தான் இந்த சமுதாயத்தை செம்மைப்படுத்த முடியும். நீங்களும் ஞானிகளை பூஜிக்கலாம். அந்த ஆற்றல் இருக்கிறதா என்ற தாழ்வு மனப்பான்மை உங்களுக்கு வேண்டாம். அதற்கு எடுத்துக்காட்டு மகான் ஔவையார்.

இந்த சமுதாயத்தில் ஆண்கள் செய்ய முடியாத, சிந்தித்துப் பார்க்க முடியாத காரியத்தை செய்தார் மகான் ஔவையார். ஆண்களுக்குத்தான் தவம்

என்று சொன்னதை உடைத்தெறிந்த மகான் ஔவையார் ஒரு ஞானி. இப்படி தலைநிமிர்ந்து சொல்லக்கூடிய ஆற்றல், மகான் ஔவையாருக்கு உண்டு. அவரும் பெண்தான்.

மகான் காரைக்கால் அம்மையார், மகான் ஆண்டாள் அம்மையார் போன்றவர்களெல்லாம் தாழ்வு மனப்பான்மையை நீக்கிவிட்டார்கள். உங்களுக்கும் அந்த வாய்ப்பு உண்டு. ஆகவே பெண்கள் ஞானிகளை பூஜை செய்ய வேண்டும். மகான் இராமலிங்கசுவாமிகளைப் போல பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும்.

மகான் இராமலிங்கசுவாமிகள் புயல் காரணமாகவோ, பூகம்பத்தாலோ, இடிமின்னல் காரணத்தாலோ, நீராலோ, நெருப்பாலோ, கொலைக்கருவியாலோ, கூற்றுவனாலோ எனக்கு ஆபத்து வரக்கூடாது என்று ஆசான் அகத்தீசரை கேட்டார். இப்படி கேட்பதற்கும் சிறப்பறிவு வேண்டும்.

பண்புள்ள கணவன் அமைய வேண்டும், பண்புள்ள புத்திரபாக்கியம் அமைய வேண்டுமென்று பெண்கள் ஆசானை கேட்க வேண்டும். எனக்கு வறுமையில்லா வாழ்வு அமைய வேண்டும், நான் பிற பெண்களை கண்டு பொறாமைப்படாதிருக்க வேண்டும், பிறரிடம் இனிமையாக பேச வேண்டும், என்னை நோக்கி வருகின்ற விருந்தினரை அன்புடன் உபசரிக்க வேண்டும், நான் வீண் பேச்சு பேசி வம்பிழுக்காதிருக்க வேண்டும். இப்படியெல்லாம் பெண்கள் ஆசானிடம் கேட்க வேண்டும்.

இதுமட்டும் போதாது. எனக்கு மரணமில்லாப் பெருவாழ்வு வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். மகான் ஔவையார் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றிருக்கிறார். நாமும் கேட்டால் அதனால் ஒன்றும் நட்டமில்லை. எந்தெந்த காரணத்தால் மனிதன் சாகின்றானோ அதிலிருந்தெல்லாம் விடுபட வேண்டுமென்று மகான் இராமலிங்கசுவாமிகள் தனது பாடலில் சொல்கிறார்.

**காற்றாலே புவியாலே ககனமத னாலே**
**கனலாலே புனலாலே கதிராதி யாலே**
**கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே**
**கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்க ளாலே**
**வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்**
**மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே**
**ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்**
**எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – தனித்திரு அலங்கல் – கவி எண் 1733.**

புயல் காற்றாலோ, பூகம்பத்தாலோ, இடி மின்னலாலோ, நெருப்பாலோ, நீராலோ, சூரியனாலோ எனக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாதென்று இராமலிங்கசுவாமிகள் தலைவனிடம் கேட்டார். சிறப்பறிவுள்ள மக்கள்தான் இப்படி கேட்பார்கள்.

கோடைக்காலங்களில் வெயில் தாங்காமல் இறந்து விட்டார்கள் என்று தினசரி செய்திதாள்களில் வரும். நீங்கள் படித்திருக்கலாம். இதிலிருந்தும் தன்னை காப்பாற்ற வேண்டும் என்கிறார்.

**விரைந்தளித்தான் எனக்கே, ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்** என்கிறார் மகான் இராமலிங்கசுவாமிகள். எந்த சக்தியாலும் வெல்ல முடியாத ஆற்றலைப் பெற்றிருக்கிறார். எந்த சக்தியாலும் தனக்கு அழிவு வரக்கூடாதென்று தன்னை பாதுகாத்துக் கொண்டார். இந்த ஆற்றலைப் பெறுவதற்கு என்ன காரணம்?

**நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே**
**நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு**
**நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான**
**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**
**வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்**
**மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்**
**புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்**
**பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – வாய்ப்பறை யார்த்தல் – கவி எண் 1530.**

மகான் இராமலிங்கசுவாமிகளுக்கு இரவும் பகலும் பிறவித்துன்பத்தைப் பற்றிதான் சிந்தனை அனைத்தும் இருந்திருக்கிறது. அதனால்தான் **விரைந்தளித்தான் எனக்கே** என்று சொல்கிறார். இந்த ஆற்றலை விரைவாக எனக்கு தந்தார் என்று சொல்கிறார். எந்த அளவிற்கு உள்ளம் உருகி ஆசானை வணங்கியிருக்க வேண்டும்.

சில அன்பர்கள் என்னால் தொடர்ந்து பூஜை செய்ய முடியவில்லையே என்று என்னை கேட்டார்கள். காலையில் ஐந்து மணிக்கு எழுந்து எனது கடமையை முடித்துவிட்டு அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என்பதால் என்னால் பூஜை செய்ய முடியவில்லை. எனக்கும் பூஜை செய்யும் வாய்ப்பு வேண்டுமெனக் கேட்டார். அதற்கு மகான் திருமூலர் உபாயம் சொல்கிறார்.

**செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை**
**வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை**
**இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை**
**நல்ல வரனெறி நாடுமி னீரே.**

**– திருமந்திரம் – இதோபதேசம் – கவி எண் 2103.**

முடிந்த அளவிற்கு பூஜை செய் என்கிறார். பூஜை செய்ய வேண்டுமென்ற உணர்வு உங்களுக்கு வர வேண்டும். பூஜை செய்ய வேண்டுமென்ற உணர்வு இருக்கிறதே அதுவே புண்ணியம் என்கிறார். முடிந்தளவிற்கு பாடுபட வேண்டும். அதனால் ஒன்றும் நட்டமில்லை.

காலையில் எழும்போதே அகத்தீசா என்று சொல்லிவிட்டு எழ வேண்டும். பெண்கள் காலை எழும்போதே பன்னிரண்டு முறை ஓம் அகத்தீசாய நம என்று சொல்லிவிட்டு கணவன் முகத்தை பார்க்க வேண்டும். இதனால் கணவன் நீடிய ஆயுளைப் பெறுவான். என்றும் பொட்டும் பூவோடும் நீ வாழலாம்.

பெண்கள் மரணமிலாப் பெருவாழ்வு வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும். உங்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது.

ஆண்களை விட பெண்களுக்குத்தான் ஒரே சிந்தனையாக உறுதியாக இருந்து கடைப்பிடிக்கக் கூடிய ஆற்றல் உண்டு. ஆனால் அவர்களிடம் நமக்கு அந்த வாய்ப்பு இருக்கிறதா என்ற தாழ்வு மனப்பான்மை உண்டு. ஆனால் சுட்டிக் காட்டினால் இறுகப் பற்றிக் கொள்கின்ற ஆற்றலும் அவர்களுக்கு உண்டு.

பூஜை செய்ய முடியவில்லை என்று சொல்லுகின்ற அன்பர்களிடம், சாப்பாடு சாப்பிடும்போது ஓம் அகத்தீசாய நம என்று சொல் என்று சொல்லியிருக்கிறோம். ஏனென்றால் கடைசிவரை அறுசுவை சாப்பிடும் வாய்ப்பு நமக்கு கிடைக்க வேண்டும்.

மருத்துவர் அறிவுரைபடி சிலர் சர்க்கரை, உப்பு இல்லாத கோதுமை கஞ்சி சாப்பிடுவார்கள். அவர்களுக்கு அனைத்து செல்வமும் இருக்கும். ஆனால் அதுதான் சட்டம். ஆகவே ஆயுள் முழுவதும் அறுசுவை உணவு சாப்பிட அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும்.

நாங்கள் தவத்திற்காக உப்பில்லா உணவை உண்டு வருகிறோம்.

நீங்கள் இறுதிகாலம் வரை அறுசுவை உணவு சாப்பிடும் பாக்கியம் வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். அதுமட்டுமல்ல உண்ட உணவு நன்கு ஜீரணமாக வேண்டும். உணவு ஜீரணமாவதற்கு மருந்து மாத்திரை தேடக் கூடாது. அதற்கும் நீங்கள் பூஜை செய்ய வேண்டும்.

எனது கணவனின் வருவாய், மருத்துவருக்கு போகக் கூடாது என்று பெண்கள் ஆசானிடம் கேட்க வேண்டும். அதை பண்புள்ள மக்களுக்கு நான் பயன்படுத்த உங்களுடைய ஆசி வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். இப்படியெல்லாம் ஒவ்வொரு நாளும் ஆசானிடம் கேட்க வேண்டும். நான் உங்களுக்கு உண்மைப் பொருளைப் பற்றி சொல்லியுள்ளேன்.

சிலருக்கு தலையில் குளிர்ந்த தண்ணீர் ஊற்றினால் சளி பிடிக்கும். அதற்கொரு உபாயம் சொல்கிறேன் கேளுங்கள். தண்ணீரை தலையில் ஊற்றும் முன் அகத்தீசா என்று சொல்லி ஊற்றினால் சளி பிடிக்காது. சிலருக்கு குளிர்ந்த தண்ணீர் குடித்தால் சளி பிடிக்கும். ஆசான் அகத்தீசரை எண்ணி தண்ணீர் குடித்தால் சளி பிடிக்காது.

ஏற்கனவே சாப்பிட்ட உணவு வயிற்றில் இருக்கும்பொழுதே, பசியில்லாமலே சாப்பிடுவார்கள். பசியில்லாமல் சாப்பிடுவது குற்றம். அதற்காக ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்லிவிட்டு எது வேண்டுமானாலும் சாப்பிட்டு விடலாம் என்று எண்ணிவிடாதே. பசித்த பின்புதான் சாப்பிட வேண்டும்.

மலச்சிக்கல் இருந்தாலும், சரியானபடி நீர் பிரியாமல் இருந்தாலும், மாதவிடாய் ஆகாவிட்டாலும் உடம்பில் நோய் வரும். உடனே சரி செய்ய வேண்டும். நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். அதுமட்டுமல்ல முன்பு உண்ட உணவு சரியாக ஜீரணித்துவிட்டதா என்று ஆராய்ந்து பார்த்து சாப்பிட வேண்டும்.

**மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

**– திருக்குறள் – மருந்து – குறள் எண் 942.**

உண்ட உணவு நன்றாக ஜீரணம் ஆகிவிட்டதா என்பதை அறிந்து உணவை உண்டால் உனக்கு வைத்தியமே தேவையில்லை என்கிறார். இதுவெல்லாம் உங்களுக்கு தேவையான அடிப்படை கருத்துகள்.

தன்னுடைய மகளுக்கு பதினைந்து பவுன் நகை போட்டு, வெகுவிமரிசையாக திருமணம் செய்து வைப்பார்கள். தன்னுடைய மகள் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக இப்படி செய்வார்கள். ஆனால் அவளது கணவன் இந்த நகைகளை விற்று மேலும் மேலும் மதுபானம் குடித்துக் கொண்டே இருப்பான். இவனால் அவனது மனைவி துன்பப்படுவாள், மகள் துன்பப்படுகிறாளே என்று தந்தை துன்பப்படுவார். இப்படி பலரையும் துன்பத்திற்கு ஆளாக்குவான். இப்படி பிறரை துன்பப்படுத்தி வாழ்கிறவன் இறக்கிறான் என்றால், அதனால் ஒன்றும் நட்டமில்லை. அளவு கடந்து மதுபானம் சாப்பிடுகின்றவன் இறந்து போனால் என்ன நட்டம்? அவன் இருந்து உலகத்தை கெடுப்பதைவிட, போவதே மேல் என்பார்கள்.

சிலபேர் பார்ப்பதற்கு நல்லவன் போன்றிருப்பான். ஆனால் இரகசியமாக மதுபானம் குடிப்பான். அது ஒருவகையான அறிவாற்றல் என்று எண்ணிக் கொண்டிருப்பான். இதுபோன்று இரகசியமாக சூதாடுவான். இப்படி இருப்பவன் இறந்தால் ஒன்றும் நட்டமில்லை. இப்படி இறப்பவர்களை கண்டு மகான் இராமலிங்கசுவாமிகள் மகிழ்ச்சி அடைகிறார்.

திருமணமாகி பதினைந்து நாட்கள்தான் ஆகிறது. அவன் இறந்து விட்டான். அவன் பண்புள்ளவன், அழகன், கல்வியறிவுள்ளவன். அவனுடைய மனைவி உயர்ந்த பண்புடையவள், அழகானவள், தினமும் பூஜை செய்பவள். என்ன செய்வது காலசூழ்நிலை அவன் இறந்துவிட்டான். அந்த பெண்ணின் தாய்தந்தை கதறி அழுது துடிக்கிறார்கள். பஞ்சமாபாவியாக இருந்தாலும் அந்த நிலை வந்தால் துடிப்பார்கள். அவ்வளவு சோகமான சூழ்நிலை. அவன் நீடிய ஆயுளைப் பெற்று வாழ்ந்திருக்க வேண்டுமென்றால், ஒன்று மகான் இராமலிங்கசுவாமிகளை பூஜை செய்திருக்க வேண்டும். இல்லையென்றால் ஆசான் அகத்தீசர், மகான் நந்தீசர், மகான் திருமூலதேவர் போன்ற ஞானிகளை வணங்கியிருக்க வேண்டும்.

தனது மகளுக்கு திருமணம் ஆகும்பொழுது அகத்தீசா, நந்தீசா என்று சொல்லி ஆசி வழங்கியிருக்க வேண்டும். இப்படி ஆசி வழங்கியிருந்தால் அவன் நிச்சயம் இறந்திருக்க மாட்டான். ஞானிகளை வணங்கி ஆசி வழங்கியிருந்தால் அவனுக்கு இந்த நிலைமை வந்திருக்காது. இது நீ செய்த குற்றம் என்கிறார்.

ஒருவருக்கு ஆசி வழங்கும்போது ஆசான் அகத்தீசரை நினைத்து ஆசி வழங்க வேண்டும். ஆசான் அகத்தீசரை நினைத்து நாங்கள் உங்களுக்கு விபூதி கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும் விபூதிக்கு மகிமை உண்டு. ஞானிகளின் பாதத்தை பற்றுகின்றவர்கள் ஆசானை நினைத்து ஆசி வழங்குவார்கள். அவர்களிடம்தான் ஆசி பெற வேண்டும். மகான் இராமலிங்கசுவாமிகள் அனைத்தையும் அறிந்தவர். எல்லோருக்கும் மரணமிலாப் பெருவாழ்வு பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் அதை கேட்பதற்கு மக்கள் மறந்து விட்டார்கள். எப்பேர்ப்பட்ட உயர்ந்த நிலையாக இருந்தாலும் சரி, விடாது சிந்தித்தால் கைகூடும்.

**இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின்றீர் உலகீர்**
**இறவாத பெருவரம்நீர் ஏன்அடைய மாட்டீர்**
**மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு**
**மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும் கண்டீர்**
**சிறந்திடுசன் மார்க்கம்ஒன்றே பிணிமூப்பு மரணம்**
**சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மின் இங்கே**
**பிறந்தபிறப் பிதில்தானே நித்தியமெய் வாழ்வு**
**பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – ஞான சரியை – கவி எண் 1554.**

**மறந்திருந்தீர்** என்று மகான் இராமலிங்கசுவாமிகள் சொல்கிறார். ஒருவன் இறந்துவிட்டால் அவனைச் சார்ந்தவர்கள், அவனுடைய உறவினர்கள் அளவிலாது அழுது அரற்றுவார்கள், சொல்ல முடியாது தடுமாறுவார்கள்.

**மறந்தும்இதை நினைக்கில்** – நிச்சயமாக மகான்கள் இதை மறக்க மாட்டார்கள்.

ஓங்காரக்குடில் அன்பர்கள் தங்களுக்கு பிரச்சனைகள் இருந்தாலும் காலை எழும்போதே, ஆசான் அகத்தீசர் நாமத்தை பன்னிரண்டு முறை சொல்லிவிட்டுதான் எழுவார்கள். இப்படி செய்தால் அவர்களுக்கு நன்மை உண்டாகும்.

**மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு** – மறக்கக் கூடாது. மறக்க மாட்டார்கள்.

**மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும் கண்டீர் சிறந்திடுசன் மார்க்கம்** – சிறந்திடு சன்மார்க்கம் என்று சொல்கிறார். உங்களுக்கெல்லாம் மரணமில்லாப் பெருவாழ்வுக்குரிய மார்க்கம் உண்டு.

**பிறந்தபிறப் பிதில்தானே நித்தியமெய் வாழ்வு பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே** – நிச்சயம் வாய்ப்பு உண்டு என்கிறார்.

அந்த வாய்ப்பு உங்களுக்கு உண்டு. அந்த வாய்ப்பை பெறுவதற்கு என்னை நீங்கள் சார்ந்து கொள்ள வேண்டும் என்கிறார்.

மகான் இராமலிங்கசுவாமிகள் சித்தி பெற்று நூற்றிபதினான்கு ஆண்டுகள் ஆகிறது. இப்பொழுது இராமலிங்கசுவாமிகள் இல்லையே, அவர் எப்படி அருள் செய்வார்கள் என்று நினைக்க வேண்டாம். அவர்தான் மரணமிலாப் பெருவாழ்வை பெற்றவர் ஆயிற்றே. எதைக் கேட்டாலும் கொடுக்கும் தகைமை உள்ளவர், பிறவித்துன்பத்தை பொடிப்பொடியாக்கும் ஆற்றல் உள்ளவர்.

என்னை கொல்ல வந்த எமனை, துண்டுதுண்டாக வெட்டு என்று சொன்னால், உடனே வீராயுதம் எடுத்து வெட்டுகின்ற ஆற்றல் உள்ளவர் மகான் இராமலிங்கசுவாமிகள். நாங்கள் சொல்கின்ற சன்மார்க்கத்தை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு என்னை நீங்கள் சார்ந்து கொள்ள வேண்டும் என்கிறார் மகான் இராமலிங்கசுவாமிகள்.

**தெரிந்துவம்மின் இங்கே** – தெரிந்து வாருங்கள், என்னைத் தெரிந்து கொள்ளுங்கள் என்கிறார்.

இந்த உலகத்தில் பெரியபெரிய விஞ்ஞானிகள், பெரியபெரிய கவி பாடும் ஆற்றல் பெற்றவர்கள், சொல்வன்மை உள்ளவர்கள் இருக்கிறார்கள். இப்படி எத்தனையோ திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள். யாராக இருந்தாலும் சிதம்பரம் இராமலிங்கம் என்று சொல்லுகின்ற தகுதி அவர்களுக்கு இல்லை.

**சிறந்திடுசன் மார்க்கம்ஒன்றே பிணிமூப்பு மரணம் சேராமல் தவிர்த்திடுங்காண்** – சிதம்பரம் இராமலிங்கம் என்று மகான்

இராமலிங்கசுவாமிகள் கையெழுத்து இடுவார். மகான் இராமலிங்கசுவாமிகளைத் தவிர, யாருக்கும் அந்த துணிச்சல் இருக்க முடியாது. அதனால்தான் என்னை நீங்கள் சார்ந்து கொள்ளுங்கள் என்கிறார்.

நானும் தில்லை நடராஜனும் ஒன்றடா, என்னை அறிந்து கொள்ளடா, வரும் விதியை தள்ளடா என்கிறார். நானும் சிவபெருமானும் ஒன்றடா என்கிறார். என்னை சார்ந்து கொள்ளுங்கள் என்கிறார்.

இராமலிங்கசுவாமிகள் என்று சொல்லடா, என் பாதத்தை பற்றடா, உனக்கு எல்லா நலங்களையும் செய்வேனடா என்கிறார். என் மீது அன்பு கொண்டு என் பாதத்தை பற்றுங்கள், உங்களுக்கு நான் பெற்ற அந்த வாய்ப்பை தருகிறேன் என்று ஆணையிட்டு சொல்கிறார்.

உங்களுடைய பிணி, மூப்பு என்கிற முதுமையையும், பல்வேறு பிணி துன்பத்தையும் நீக்க என்னால் முடியும். ஆகவே என் பாதத்தை பற்று என்று கருணை கொண்டு மகான் இராமலிங்கசுவாமிகள் சொல்லியிருக்கிறார். இனி தாமதிக்க வேண்டாம். இதுபோன்ற ஆற்றல் உள்ளவர்தான் மகான் பட்டினத்தார்.

மகான் பட்டினத்தாரின் தாய், மிகுந்த கருணை உள்ளவர் என்பது மகான் இராமலிங்கசுவாமிகளுக்கு தெரியும். தாயின் பெருமையை நன்றாக உணர்ந்தவர்கள் மகான்கள்.

இப்பொழுது பெரும்பாலோர் தாயை இகழ்ந்து பேசுபவர்களாக உள்ளார்கள். அதுமட்டுமல்ல தாய்க்கு முதுமை வந்தபின், அவரை கவனிக்காமல் விட்டுவிடுகிறார்கள்.

மகான் பட்டினத்தார் முற்றுப்பெற்ற பின்னும் அவர் தன் ஊரை விட்டு செல்லவில்லை. தனது தாயின் முடிவிற்கு பின்புதான் ஊரை விட்டு சென்றார்.

வாழை மட்டையைப் பற்றி உங்களுக்குத் தெரியும். தனது தாய் இறந்தவுடன் வாழை மட்டையில் வைத்து எரித்தார்.

மகான் பட்டினத்தார் தனது தாயின் பெருமையைப் பற்றி சொல்கிறார். தனது தாய்க்கு வாய்க்கரிசி போடும்போது, என்னை இந்தளவிற்கு ஆளாக்கிய தாயே, என்னை பெறுவதற்கு முன்னே, கடவுள் தன்மையுள்ள பிள்ளையை பெற்றெடுக்க வேண்டுமென்று எனக்காக பெரும் தவமிருந்த தாயே, கருப்பையில் நான் இருக்கும்போது என்னால் ஏற்பட்ட எல்லா துன்பங்களையும் பொறுத்துக் கொண்டாள் என்கிறார். நான் பிறந்தபின் எனக்காக, என் தாய் பத்திய உணவை மேற்கொண்டாள். இப்படியெல்லாம் என்னை வளர்த்து ஆளாக்கிய எனது தாய்க்கோ நான் அரிசி இடுவேன் என்று தாய்க்கு வாய்க்கரிசி போடும் போது சொல்கிறார்.

தான் பெற்றெடுக்கும் பிள்ளை சிறந்த கல்விமானாகவும், ஞானியாகவும், கடவுளாகவும் வேண்டுமென்று எனது தாய் எத்தனை ஜென்மங்களாக தவமிருந்து என்னை பெற்றெடுத்தாள். இந்த வாய்ப்பை பெற வேண்டுமல்லவா, எமனை பொடியாக்கக் கூடிய ஆற்றலை நான் பெற்றேன். என்னை பெற்றெடுப்பதற்கு முன், தாய் அல்லவா எனக்காக பூஜை செய்தாள். அதனால்தான் நான் இந்தளவிற்கு நிலை உயர்ந்தேன். இப்படிப்பட்ட பெருமைமிக்க தாய்க்கோ நான் அரிசி இடுவேன் என்கிறார். எனது தாய்க்கு எப்படி கொள்ளி வைப்பேன் என்கிறார்.

**அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு**
**வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள**
**தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ**
**மானே எனவழைத்த வாய்க்கு.**

**– மகான் பட்டினத்தார் – கவி எண் 5.**

**அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்**
**கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் – மெள்ள**
**முகம்மேல் முகம்வைத்து முத்தாடி என்றன்**
**மகனே எனவழைத்த வாய்க்கு.**

**– மகான் பட்டினத்தார் – கவி எண் 6.**

இப்படிப்பட்ட பெருமையுடைய தாய்க்கோ நான் அரிசியிடுவேன், எப்படி தாய்க்கு கொள்ளி வைப்பேன் என்று மகான் பட்டினத்தார் வருந்துகிறார். இப்படிப்பட்ட பிள்ளையல்லவா பெற்றெடுக்க வேண்டும்.

நான் குழந்தையாக இருக்கும்போது எனது தாய் வேகமாக முத்தம் வைத்தால் அந்த பிஞ்சு கன்னங்களுக்கு நோகும் என்று மெல்ல முகம்மேல் முகம் வைத்து முத்தாடி என்றன் மகனே என்று அழைத்த வாய்க்கு அரிசியோ நான் இடுவேன் என்று மகான் பட்டினத்தார் சொல்கிறார். இப்படிப்பட்ட தாய்ப்பாசம் உள்ள பிள்ளையை அல்லவா பெற்றெடுக்க வேண்டும்.

இப்படி பாசம் காட்டாவிட்டாலும், இகழ்ந்து பேசாத, அடிக்காத பிள்ளையையாவது பெற்றெடுக்க வேண்டும்.

**வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்** – என் தாய் என்னென்ன விரும்பி கேட்டாளோ அதையெல்லாம் அல்லவா கொடுத்து மகிழ்ந்திருக்க வேண்டும். அவள் வாய்க்கோ நான் அரிசியிடுவது. என்னுடைய தாய் என்னை அன்புடன்

உபசரித்து எனக்காக பத்தியம் மேற்கொண்டு, நோய் வந்தபோதெல்லாம் இரவுபகலாக கஷ்டப்பட்டு எனக்காக கண் விழித்திருந்து என்னை வளர்த்தெடுத்த தாய்க்கோ நான் அரிசி இடுவேன் என்கிறார். எனது தாய் என்னென்ன விரும்புகிறாளோ அதையெல்லாம் கொடுத்து மகிழ்ச்சியடைகின்ற நான், எப்படி என் தாய்க்கு அரிசியிடுவேன் என்கிறார்.

தினம் பூஜை செய்த காரணத்தினால் அந்த ஆற்றலை அவர் பெற்றார். சிறிது நேரம் கூட ஏமாந்தால் தனக்கு பெரும் இடையூறு வருமென்று எண்ணுவார்.

**வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல்.**

**– திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – குறள் எண் 38.**

**வாழ்நாள் வழியடைக்கும் கல்** – இதுதான் மரணமிலாப் பெருவாழ்வு ஆகும். ஆகவே தினமும் தொடர்ந்து பூஜை செய்தால், மரணமிலாப் பெருவாழ்வை பெறலாம்.

ஞானிகள் ஒவ்வொரு நாளும் தனது கடமையை சிறிதும் தடையில்லாமல் செய்வார்கள்.

உண்மைப் பொருள் அறிந்த சன்மார்க்கவாதிகள் தனக்கு நோய் சரியானால் பத்து ஏழைகளுக்கு உணவு கொடுப்பதாக வேண்டிக் கொள்வார்கள்.

சிலபேர் தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சம்பளம் சரியாக கொடுக்க மாட்டார்கள். அவனிடம் ஐநூறு ரூபாய்க்கு உழைப்பை வாங்கிக் கொண்டு நூறு ரூபாய் கொடுப்பார்கள். இவன் கோவிலிற்கு சென்று பெரும் பக்தியோடு பூசை செய்வான். அது ஆன்மீகமல்ல, ஆன்மீக சூனியம்.

பண்புள்ள மக்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் தருவார்கள். அதுதான் சுத்த ஆன்மீகம். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டு, கோவில் உண்டியலில் பணம் போட்டான் என்றால், அவன் சாமியை ஏமாற்ற நினைக்கிறான். சன்மார்க்கவாதிகள் இப்படி செய்ய மாட்டார்கள்.

எங்கே கருணை உள்ளதோ, அதுவே சுத்த சன்மார்க்கம், உண்மையான சன்மார்க்கம். அவர்கள் நிச்சயமாக இந்த காரியத்தில் ஈடுபட மாட்டார்கள்.

நான் சுத்த சன்மார்க்கவாதி. சன்மார்க்கவாதிகளுக்கு துன்பம் வந்தால் ஏழைகளுக்கு பசியாற்றிவிப்பார்கள், ஞானிகளை பூஜை செய்வார்கள். அவர்கள் ஞானிகளை உள்ளம் உருகி பூஜை செய்த காரணத்தினால் இந்த ஆற்றலைப் பெற்றார்கள்.

உங்களால் காய்ந்த விறகை கொண்டு அடுப்பெரிக்க முடியவில்லை. பச்சை வாழை மட்டையை கொண்டு தனது தாய்க்கு கொள்ளி வைத்தார் என்றால் அவருடைய ஆற்றல் எவ்வளவு பெரியது? இவ்வளவு பெரிய ஆற்றலைப் பெறுவதற்கு அவர் தினமும் பூஜை செய்தார்.

**நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்**
**சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்**
**பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்**
**தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராரே.**

**–திருமந்திரம் – அணைந்தோர் தன்மை – கவி எண் 2968.**

**நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன் சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்** என்று சொல்வதற்கு எப்பேர்ப்பட்ட ஆற்றலை பெற்றிருப்பார்.

அந்த சக்தியை நீங்கள் பெற வேண்டும். அதற்கு உங்களுக்கு தகுதி இருப்பதால் பேசிக் கொண்டிருக்கிறோம். சிந்திக்கும் ஆற்றல் உங்களுக்கு இருக்கிறது. நாங்கள் பேசுவது அடிப்படை.

**நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்** – இதல்லவா ஆற்றல். எமன் வந்தால் வாள் கொண்டு அவனை துண்டுதுண்டாக வெட்டுவேன் என்கிறார்.

**சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்** – எனது நண்பன் சிவன். எதிரி எமன் என்கிறார்.

ஓங்காரக்குடிலுக்கு சென்று ஆசானை தரிசனம் செய்து, தனது வாழ்க்கை பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று வந்திருக்கிறீர்கள். இதுமட்டுமல்ல மரணமிலாப் பெருவாழ்வை பெறுகின்ற ஆற்றல் உங்களுக்கு உண்டு. மகான் ஔவையார், மகான் காரைக்கால் அம்மையார், மகான் ஆண்டாள் அம்மையார், மகான் மங்கையர்க்கரசியார் போன்றவர்கள் மரணமிலாப் பெருவாழ்வை பெற்றிருக்கிறார்கள். இதுநேரம் வரை நாங்கள் சொன்ன கருத்துகளை பின்பற்றி நீங்களெல்லாம் வாழ்க்கை பிரச்சனை தீர்ந்து நல்லபடி வாழ வேண்டும். நீங்களும் மரணமிலாப் பெருவாழ்வை அடைய வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன் வணக்கம்.

..............

முருகப்பெருமான் தங்கி அருள் செய்யும் இடமே
துறையூர் ஓங்காரக்குடில் ஆகும்.

# மகான் காரைக்கால் அம்மையார் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

12.02.2020, புதன்கிழமை

1. அறமெனும் சக்தி கொண்ட
அண்ணலே ஆறுமுக ஞானியே
வரமென உன் வழி வரும் மக்கள்
வையகம் வியக்க சிறப்பரெனக் கூறி

2. கூறியே அருள் பிரசன்ன ஆசி
குறையிலா விகாரி கலை திங்கள்
இருபான் நவ திகதி புந்திவாரம்
(விகாரி வருடம் தை மாதம் 29ம் நாள், 12.02.2020, புதன்கிழமை)
இயம்பிடுவேன் காரைக்கால் அம்மையார் யானும்

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான தரும வழி கொண்டு
ஞானமருளும் அரங்கன் நெறியை
நம்பி உலக மக்கள் வருதல் காண

4. காணவே மக்களிடை ஏற்றமும்
கணக்காய் நல்ல மாற்றமும் காணும்
ஞானகுருவாக அரங்கன் தரும்
நன்னெறி சன்மார்க்கம் தன்னை

5. தன்னையே அனைவரும் ஏற்றுமே
தருமத்தை செய்து கொண்டு
மண்ணுலகமெங்கும் தருமசிந்தை பரவ
மாதருமமதை வளர்த்து வர

6. வருகவே சன்மார்க்கம் நிறைந்த
வல்லமையான ஞான உலகம்
முருகப்பெருமான் ஆசிபெற்று நன்கு
முழுமைபட பாதுகாப்பாக அமையும்

7. அமையவே கலிகாலத் துன்பம்
அகன்று விலகி தனித்துவம்பட
அமையும் ஞானவான்கள் துணை
ஆறுமுகனார் ஆளுமைபட மாற்றம் காணும்

8. காணவே பிரணவக்குடிலான
கந்தவேலன் ஆட்சி புரிகின்ற
ஞானசபையை உலகமக்கள்
நல்கி சரணடைவு கண்டுவிட

9. கண்டுவிட பிணி சோடையோ
கண்டமிடரோ இல்லாத வண்ணம்
தொண்டுமிக்க வளர்ச்சி கண்டு
தெய்வபலமுடன் உலகோர் சிறப்பர்

10. சிறப்புதரும் குருவாக வந்தநல்
சிவராஜயோகி முருகப்பெருமானின்
மறுப்பில்லா சக்தியாக அருளிவர
மக்களே தொடர்ந்து குருவாக நாடி

11. நாடியே அரங்கன் திருவடியை
நம்பி உயர்தீட்சை பெற்று வர
தேடியே தெய்வபலம் பெற்று நன்கு
தரணியோர் ஞானயுகம் படைப்பர் அருள் பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் காரைக்கால் அம்மையார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :

அறம் என்கிற ஆற்றல்மிக்க சக்தியை அளவிலாது கொண்டிட்ட மகாஞானியே அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகரே உம்மை நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு உமது கொள்கைகளை வாழ்வில் பின்பற்றி உம்மை பின்தொடரும் மக்களெல்லாம் உமது வரத்தினைப் பெற்று உலகமே வியக்குமளவிற்கு சிறப்படைவார்கள். அத்தகு வல்லமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகரே உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் தை மாதம் 29ம் நாள் 12.02.2020, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே அருள் பிரசன்ன ஆசி நூல்தனையே காரைக்கால் அம்மையார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் காரைக்கால் அம்மையார்.

ஞானத்தினை தந்தருளும் ஆறுமுக அரங்கமகானின் தூய நெறியினை உலக மக்கள் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு வாழ்வினில் கடைப்பிடித்து வர உலக மக்களிடையே நல்ல மாற்றங்கள் உருவாகிடும், பலவிதமான முன்னேற்றங்களை அடைவார்கள். ஞானகுருவாக ஆறுமுக அரங்கர் உலகமக்களுக்கு உபதேசித்து அருளுகின்ற நன்னெறியாம் சன்மார்க்க நெறியினை அனைவரும் ஏற்றுக் கொண்டு தருமங்களை செய்து உலகினில் எல்லா தேசங்களிலும் தருமம் பரவிட

செய்யும் விதத்தினிலே மாதருமங்களை வளர்த்து வர அரங்கன் தர்மம் பெருகிட துணையாய் நின்று அரங்கரின் தருமத்தை வளர்த்து வர உலகினில் சன்மார்க்கம் நிறைந்த வல்லமைமிக்க ஞானஉலகம் முருகப்பெருமானின் அருளாசிகளைப் பெற்று முழுமையான அருள் பாதுகாப்புமிக்க உலகமாக இவ்வுலகம் அமைந்திடும்.

உலகினில் மாமாயையான கலியுகத்தினால் வருகின்ற துன்பங்கள் எல்லாம் உலகைவிட்டு அகன்று தனித்துவமான உலகமாக அமையும். உலகம் ஞானவான்கள் துணையுடன் முருகப்பெருமான் தலைமையிலே முருகப்பெருமானின் ஞான ஆட்சியாக மாற்றம் அடையும். ஆகவே ஞானத்தலைவன் முருகப்பெருமானே அரங்கராக அவதரித்து அருள்பாலிக்கின்ற ஞான பீடமாம் ஏழாம் படைவீடு துறையூர் ஓங்காரக்குடில் என்கிற ஞானசபையினை உலக மக்கள் பயபக்தியுடன் அணுகி அரங்கரிடத்து சரணாகதியாக சரணடைந்து விட்டால் சரணடைந்தவர்களது பிணிகளெல்லாம் விலகும், நோய் துன்பம் நீங்கிடும். இடைக்கண்டங்கள் ஏதும் வாராது. உலக மக்களுக்கு தொண்டுகளை தடையின்றி செய்து தொண்டு பலம் பெருக்கி தெய்வபலத்தையும் பெற்று சிறப்படைவார்கள்.

சகலவிதமான சிறப்புகளையும் தந்தருளும் ஞானசற்குருவாக அவதரித்துள்ள சிவராஜயோகி அரங்க மகான் முருகப்பெருமானின் சக்தியாக நின்று உலகோர்க்கு அருள் செய்து வருகின்றார். ஆதலினால் உலக மக்களே அரங்கரை குருவாக ஏற்றுக் கொண்டு அரங்கர் திருவடியைப் பற்றி வணங்கி தீட்சை உபதேசம் அடைந்து கடைப்பிடித்து வர தெய்வபலம் பெற்று உலகோர் மாற்றம் அடைந்து ஞானயுகத்தினை படைப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் காரைக்கால் அம்மையார்.

– சுபம் –


ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள், தினசரி, மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்

கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.

✆ 04327–255184, செல்: 90950 33311
மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

# மகான் சுப்பிரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்

(அன்பர்களுக்கு ஓர் அரிய நூல்) பாகம் : 134

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed., திருச்சி. செல் : 99655 71837

10.02.2020, திங்கட்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானிகளை பூஜித்து கலியுகத்தில்
ஞானவான்களை உருவாக்கும் சக்தியாக
ஞானபண்டிதன் என் ஆற்றல்பட வந்த தேசிகாபோற்றி

2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே புகலுவேன்
அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி தன்னை
ஆற்றல்பட அரங்கா எனும் நாமஜெபத்தோடு
அகிலமெங்கும் தொண்டர்கள் செய்யும் சன்மார்க்க நெறி வழிபாடு

3. வழிபாடு இந்த உலகத்தை வழிநடத்திக் காக்கும்
வழிபாடு இந்த உலகத்தை வழிகாட்டி ஞானயுகமாக்கும்
அழியாமை தந்து அரங்கன் உன் கொள்கையே
அன்பர்களை ஞானிகளாக்கும் செயலில் இறங்கும்

4. இறங்கவே இந்த அற்புதத்தை அரங்கன் உன்னுள்
இரண்டறக் கலந்து ஆறுமுகன் யான்
வரங்களென அருளி உந்தனோடு கலந்து
வருவோர்க்கு சர்வ சக்தி தந்தருள

5. அருளவே அரங்கன் கொள்கை உலகை ஆளும்
அருளவே அரங்கன் அறமே ஞானயுகம் படைக்கும்
பெருமளவில் அரங்கன் தொண்டர் படைகள்
பேருலகமெங்கும் பரவி அற்புதத்தை நடத்த

6. நடத்தவே கலியுகம் சடுதி ஞானயுகமாகும்
ஞானிகளின் சக்தியாக ஞானபண்டிதன்
யானும் தடையின்றி அரங்கனுள் கலந்து நித்தம் நித்தம்
தக்க சூட்சும பலம் கூட்டி வருக

7. வருகவே அரங்கனால் இந்த அற்புதம்
வையகமெங்கும் நடந்தேறும்
முருகா எனும் பூஜை வழிபாடும் சிறப்பும் முழுமைபட
ஞானயுகத்தைப் படைக்கும் ஞான அறிவுரை ஆசிமுற்றே.

–சுபம்–

# முருகப்பெருமானை போற்றுவோம் நீதியைப் பெறுவோம்

**அகத்தீசனை வணங்கி பூஜித்து ஆசி பெற்றிட்டால்....**

இதுநாள் வரையிலும் இவ்வுலகினில் நடந்த மனிதர்களின் ஆட்சியின் விளைவால் மக்கள் ஜாதியாலும், இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும், தேசத்–தாலும் பிரிவினைக்கு உள்ளாகி ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டு பகை கொண்டு மனிதனை மனிதனே எதிரியாக பாவித்து சண்டையிட்டு மடிந்துபோய் கொண்டு இருந்தார்கள். ஆனால் இக்காலம் ஞானபண்டிதனின் ஆட்சி காலம், ஞானிகள் ஆட்சி காலம் என்பதினாலே மனிதருக்குள் இருந்த பாகுபாடுகளெல்லாம் ஞானிக–ளால் அகற்றப்பட்டு எல்லோரும் ஓர் குலம், கடவுள் ஒருவரே அனைவரும் ஒரு தாய்பிள்ளைகள் எனும் உலகமே முருகப்பெருமானின் குழந்தைகள் எனும் ஒருமித்த உலகம் உருவாகுவதினாலே இனிவரும் காலமெல்லாம் உலகினில் ஜாதிகள் இருக்க–ாது, மதங்கள் இருக்காது, இனங்கள் இருக்காது, மொழிகள் ஒன்றுபடும், தேசங்கள் ஒன்றுபடும். எல்லா உலகமும் ஒரு குடையின் கீழ், அது முருகப்பெருமானின் வெண்கொற்ற குடையின் கீழ் வரும் என்பதை அறியலாம்.

**முருகப்பெருமான் திருவடிகளைப் பற்றி பூஜித்து ஆசி பெற்றிட்டால்....**

இக்காலம் ஞானிகள் ஆட்சிகாலம் என்பதினாலே எவ்விடத்தும் முருகனே அரூப நிலை நிற்பதினாலே எவரேனும் லஞ்சத்தால் பாதிக்கப்பட்டாலோ, கலப்படத்தினால் பாதிக்கப்பட்டாலோ, குண்டர்களின் கொடுமைக்கு ஆளானாலோ அல்லது வலிமை கொண்டும், பணபலம் கொண்டும், ஆள்படை கொண்டும் நீதிக்கு புறம்பாக நடந்து கொண்டாலோ அல்லது சாமான்யர்களை துன்புறுத்தினாலோ பாதிக்கப்பட்டோர் ஒரு ஜோதியேற்றி ஜோதியின் முன் முருகா! முருகா! முருகா! காத்தருள்வாய் எங்களை, நீதியை நிலைநாட்டு என வேண்டுகோள் தொடர்ந்து பக்தி சிரத்தையுடன் வைத்திட்டால் போதும், பாதிக்கப்பட்டவர்க்கு முருகன் அருளினால் உடனேயே பதிலும் பரிகாரமும் கிடைப்பதோடு அநீதி செய்பவர்களும் முருகனருளால் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும், அவ்விதமான நீதிதேவனின், நீதி உடன் கிடைக்க அவரவரும் முருகப்பெருமான் உலகெங்கும் வெளிப்பட ஏதுவாய் தவறாது முருகனது திருநாமங்களை பயபக்தியுடன் சொல்லிவருவதோடு அவரவரால் இயன்ற அளவு பசியாற்றுவித்தும் வரவர இச்செயல்கள் வெகு விரைவில் உலகெங்கும் நடந்து தவறு செய்யவே மனிதன் அஞ்சுமளவிற்கு வரும் என்பதையும் அறியலாம். பாதிக்கப்பட்டோர் முருகனது அருளால் பரிகாரம் பெற வேண்டுமாயின் முதலில் அவர் உயிர்க்கொலை செய்து புலால் உண்ணும் கொடிய பாவச்செயலை செய்யாதவராய் இருத்தல் வேண்டும், இருந்தாலும் குற்றமில்லை, இன்று முதல் புலால் உண்ணமாட்டேன் என முருகனது திருவடிகளிலே சத்தியமிட்டு வேண்டுகோள் வைக்க அவர்பாலும் இரங்கி அருள்புரிவான் பெருங்கருணைத் தாய் முருகப்பெருமான் என்பதையும் அறியலாம்.

.............

## குருநாதர் அருளிய உபதேசங்கள்

1. உண்மை என்பது அகத்தீசர் திருவடியே.
2. உண்மை பக்தியே உயர்த்தும் உன்னை.
3. பக்தி செலுத்தசெலுத்த பாவங்கள் பொடியாகும்.
4. பக்தி செலுத்தசெலுத்த பண்புகள் ஓங்கும்.
5. பக்தி செலுத்தசெலுத்த பரவசம் அடையலாம்.
6. பக்தி செலுத்தசெலுத்த பாவ புண்ணியம் அறியலாம்.
7. பக்தி செலுத்தசெலுத்த பண்பு ஈதென்று அறியலாம்.
8. பக்தி செலுத்தசெலுத்த பரிவுடன் வாழலாம்.
9. பக்தி செலுத்தசெலுத்த பிறருக்கு பரவசம் ஊட்டலாம்.
10. பக்தி செலுத்தசெலுத்த பாசம் என்பது உடம்பு என்று அறியலாம்.
11. பக்தி செலுத்தசெலுத்த பசு என்பது உயிர் என்று அறியலாம்.
12. பக்தி செலுத்தசெலுத்த பதியாகிய சுழிமுனையை அறியலாம்.
13. பக்தி செலுத்தசெலுத்த பசு பாசத்தை பதியுள் சேர்க்கலாம்.
14. பக்தி செலுத்தசெலுத்த பணிவுடன் வாழலாம்.
15. பக்தி செலுத்தசெலுத்த பகையை வெல்லலாம்.
16. பக்தி செலுத்தசெலுத்த பண்புடன் வாழலாம்.
17. பக்தி செலுத்தசெலுத்த பகைமையை நீக்கலாம்.
18. பக்தி செலுத்தசெலுத்த பாவத்தை போக்கலாம்.
19. பக்தி செலுத்தசெலுத்த பக்குவம் உண்டாகும்.
20. பக்தி செலுத்தசெலுத்த படாடோபம் நீங்கும்.
21. பக்தி செலுத்தசெலுத்த வீண் ஆரவாரம் செய்யார்.
22. பக்தி செலுத்தசெலுத்த பிறரை மதித்து வாழ்வார்.
23. பக்தி செலுத்தசெலுத்த மன்னிக்கும் குணம் உண்டாகும்.
24. பக்தி செலுத்தசெலுத்த பழிவாங்கும் உணர்ச்சி நீங்கும்.
25. பக்தி செலுத்தசெலுத்த பரோபகாரி ஆகலாம்.
26. பக்தி செலுத்தசெலுத்த நன்மனம் ஓங்கும்.
27. பக்தி செலுத்தசெலுத்த வன்மனம் நீங்கும்.

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.


குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## மாசி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, மாசி மாதம் 26ஆம் தேதி,**

**09.03.2020 - திங்கட்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## பங்குனி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, பங்குனி மாதம் 25ஆம் தேதி,**

**07.04.2020 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

# ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ.200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம், மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ.200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

..................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

## தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

## உயிர் இரக்கமே இறைவழிபாடு....

**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

## ம. அருள் பிரகாசம்

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே
பிண்டமும் அதிலுறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபர மணியே
நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற
அனைத்தையும் தரும் ஓர் அரும்பெறல் மணியே
விண்பதம் அனைத்தும் மேல்பதம் முழுவதும்
கண்பெற நடத்தும் ககனமா மணியே
பார்பதம் அனைத்தும் பகரடி முழுவதும்
சார்புற நடத்தும் சரவொளி மணியே

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.
Builders & Estates
Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**
அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,
113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,
வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________ பின்கோடு ____________

வட்டம் : ____________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்